**அரசுத் தேர்வுகள் இயக்ககம் சென்னை – 600 006**

**மேல்நிலை இரண்டாமாண்டு துணைத் தேர்வு செப்டம்பர்/அக்டோபர் 2018**

**விடைத்தாட்களின் நகலினை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளல்**

**மறுகூட்டல் அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல்**

**செய்திக் குறிப்பு**

செப்டம்பர் / அக்டோபர் 2018, மேல்நிலை இரண்டாமாண்டு துணைத் தேர்வெழுதி விடைத்தாட்களின் நகல் கோரி விண்ணப்பித்த தேர்வர்கள் **13.11.2018 (செவ்வாய்கிழமை) பிற்பகல்** முதல் **scan.tndge.in** என்ற இணையதளத்திற்குச் சென்று தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியினைப் பதிவு செய்து தாங்கள் விண்ணப்பித்த பாடங்களுக்குரிய விடைத்தாட்களின் நகலினைப் பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம்.

விடைத்தாட்களின் நகலினை பதிவிறக்கம் செய்த பிறகு மறுகூட்டல் – IIஅல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விரும்பினால், இதே இணையதள முகவரியில் “Application for Retotalling/Revaluation” என்ற தலைப்பினை Click செய்து வெற்று விண்ணப்பத்தினைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

இவ்விண்ணப்பப் படிவத்தினை, பூர்த்தி செய்து இரு நகல்கள் எடுத்து **14.11.2018 (புதன் கிழமை) காலை 10.00 மணி முதல் 15.11.2018 (வியாழக் கிழமை) மாலை 5.00 மணிக்குள்** உரிய முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கான கட்டணத்தினை முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் பணமாகச் செலுத்த வேண்டும்.

**மறுமதிப்பீடு**

ஒரு தாள் கொண்ட பாடம் – ரூ.505/–
இரு தாள் கொண்ட பாடம் (மொழிப்பாடம் மற்றும் ஆங்கிலம்)– ரூ.1010/–

**மறுகூட்டல்**

ஒரு தாள் கொண்ட பாடம் – ரூ.205/–
இரு தாள் கொண்ட பாடம் – ரூ.305/–
(மொழிப்பாடம், ஆங்கிலம் மற்றும் உயிரியல்)

**ஒம்/–**
**இயக்குநர்**

நாள் : 10.11.2018.
இடம் : சென்னை – 600 006.